# தேவனுடைய உண்மையான ஊழியக்காரன் ஒருவனைக் குறித்த என்னவொரு அழகான காட்சி



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## செய்தி: **தீர்மானத்தின் நேரம்,** ஜூன் 11, 1959, சிகாகோ, இல்லினாய்ஸ், அமெரிக்கா

**எனவே ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய தீர்மானத்தைச் செய்யும்படியான நேரமானது அவனுக்குக் குறிக்கப்பட்டிருக்கிறது, அவன் ஒரு பிரசங்கியாயிருந்தாலும், அல்லது ஒரு தீர்க்கதரிசியாயிருந்தாலும், அல்லது ஒரு சபை அங்கத்தினனாக இருந்தாலும், அல்லது என்னவாயிருந்தாலும், அவன் ஒரு தீர்மானம் செய்ய வேண்டியுள்ளது.**



**13. அந்த நேரம் வந்தது, ஆபிரகாம் தன்னுடைய குமாரன் ஒரு அவிசுவாசியை விவாகம் செய்ய**

விரும்பவில்லை என்று அவன் தீர்மானித்துக் கொண்டான்.

இன்று ஆபிரகாமுடைய குமாரர்களும் குமாரத்திகளுமாகிய கிறிஸ்தவர்களுக்கும் அது ஒரு நல்ல தீர்மானமாகும், அவர்களுடைய பிள்ளைகளைக் குறித்தும் அதே தீர்மானத்தைச் செய்வது.

இப்பொழுது, அந்த அவிசுவாசியான பெண்கள் எவ்வளவு கவர்ச்சி வாய்ந்தவர்களாக இருந்தாலும், அவர்கள் எவ்வளவு அருமையான பெண்களாக இருந்தாலும் அது எந்த வித்தியாசத்தையும் உண்டாக்குவதில்லை, ஆனால் ஆபிரகாம் அம்மாதிரியான காரியத்தோடு தன்னுடைய குமாரன் இணைக்கப்படுவதை விரும்பவில்லை.

எனவே, அவன் யாரை விவாகம் செய்ய வேண்டும் என்பதைக் குறித்து தீர்மானம் செய்ய வேண்டியிருந்த



ஒரு நேரத்தை உடையவனாய் இருக்க வேண்டியிருந்தது.

பிறகு ஈசாக்கிற்காக இந்த மணவாட்டியை தேர்ந்தெடுக்கும்படி அவன் யாரை அனுப்ப வேண்டும் என்ற ஒரு தீர்மானத்தை அவன் செய்ய வேண்டியதாயிருந்த சமயம் வந்தது. அந்த நேரம் வந்த போது, அவன் தன்னுடைய ஊழியக்காரர்கள் எல்லாரையும் நோக்கிப் பார்த்தான்.



14. நாம் இங்கே ஆபிரகாமைக் குறித்த ஒரு அழகான பாடத்தில், பிதாவாகிய தேவன் தம்முடைய குமாரனுக்கு ஒரு மணவாட்டியைச் சென்று கண்டுபிடிக்கும்படி ஒரு

ஊழியக்காரனைத் தேடுவதைக் குறித்துள்ள பிதாவாகிய தேவனின் முன்னடையாளமாக நாம் ஆபிரகாமைக் கற்றுக் கொள்கிறோம். அதைத்தான் பிதாவானவர் இன்று செய்து கொண்டிருக்கிறார்.

அவர் மணவாட்டிக்கு அனுப்பும் இந்தச் செய்தியை எடுத்துச் செல்லும்படி, அவர் நம்பிக்கை வைத்திருக்கிற யாரோ ஒருவரை கண்டுபிடிக்கும்படி அவர் தம்முடைய குழுவை நோக்கிப் பார்த்துக் கொண்டிருக்கிறார்.

எலியேசர் தான் அந்தத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவன் என்று அவன் தெளிவாக முடிவு செய்தான், ஏனென்றால் எலியேசர் ஒரு நம்பகமான ஊழியக்காரன் என்பதைக் கண்டுகொண்டிருந்தான்.

அவன் விசுவாசமுள்ளவனாகவும், உண்மையுள்ளவனாகவும், நேர்மையுடையவனாகவும், நீதிமானாகவும், கபடமில்லாதவனாகவும் இருந்தான்.



தேவன் தம்மிடத்திலிருந்து சபைக்கு ஒரு செய்தியை கொண்டு செல்ல தேர்ந்தெடுக்கக் கூடிய ஒரு ஊழியக்காரனுடைய மாதிரி இதுதான்: நீதிமானாயிருக்கிறான் என்று நிரூபிக்கப்பட்ட ஒருவனைப் போலிருத்தல். ஒரு குமாரனைத் தேர்ந்தெடுத்தல், அல்லது அவனை ஸ்தானத்தில் பொருத்துதல் என்பதன் பேரில் இங்கே சென்ற முறை கொடுக்கப்பட்ட என்னுடைய செய்தி உங்களுக்கு ஞாபகம் உள்ளதா? அவன் எப்படியாக முதலில் நிரூபிக்கப்பட்டு, அதன்பிறகு குடும்பத்திற்குள் புத்திர சுவிகாரம் பெறுகிறான் அல்லது அந்த ஸ்தானத்தில் பொருத்தப்படுகிறான் என்பதைப் பற்றி.

15. ஆபிரகாமுக்கு தேவையாயிருந்தவைகளை எலியேசர் நிறைவு செய்கிறவனாயிருந்தான். எலியேசர் முன்மாதிரியான ஊழியக்காரனாக சித்தரிக்கப்படுகிறான். அவன் அனுப்பப்படுவது வரை அவன் எவ்வாறு போகாமல் இருந்தான் என்பதைக் குறித்து ஆதியாகமம் 24ம் அதிகாரத்தில் நீங்கள் அந்தக் கதையை வாசித்திருக்கிறீர்கள்.

அநேகர் வெறுமனே அதைக் கொண்டு எவ்வளவு பணம் சம்பாதிக்க முடியும் என்பதற்காக செல்கின்றனர். இந்த மற்றவர்களோ தங்களுக்காக ஒரு பெரிய பெயர் பிரஸ்தாபத்தை உண்டாக்கிக் கொள்வதற்காக செல்கின்றனர். மற்றவர்கள் பிரபலமாக இருப்பதற்காக போகின்றனர். மற்றவர்கள் தங்களை மனிதனால் உண்டாக்கப்பட்ட ஏதோவொரு



ஆட்சி முறைமை (regime) அனுப்புவதன் காரணத்தினால் போகின்றனர்.

ஆனால் சிலர் தேவன் தங்களை அனுப்புவது மட்டுமாகக் காத்திருப்பார்கள். முன்மாதிரியான ஊழியக்காரன் அதைச் செய்வான்.

மேலும் கவனியுங்கள். அவன் போன போது, அவன் எங்கே அனுப்பப்பட்டானோ அங்கு மாத்திரம் சென்றான், அதிக பணமுண்டு என்ற காரணத்தினால் சிலர் இங்கே போகலாம் என்றோ, அல்லது பெரிய கூட்டம் உண்டு என்ற காரணத்தினால் இங்கே போகலாம் என்பதோ அல்ல.

அவன் எங்கே அனுப்பப்பட்டானோ மிகச்சரியாக அங்கே அவன் சென்றான்.

16. தேவன் அனுப்புகிற எந்தவிடமா யிருந்தாலும், பரிசுத்த ஆவியானவர் அசையும் போது, தானும் அசையும் மனிதர்களையே தேவன் இன்று தேடிக் கொண்டிருக்கிறார்.

அதுதான் முன்மாதிரியான ஒரு ஊழியக்காரன்.

அது மட்டுமல்ல, அவன் தன்னுடைய செய்திகளை பிரசங்கிக்க வேண்டிய தன்னுடைய இடத்திற்கு அவன் போன போது, அவன் தன்னை ஒருபோதும் தற்புகழ்ச்சி செய்யவேயில்லை. அவன் எவ்வளவு மகத்தானவன் என்பதைப் பற்றியோ, அல்லது தன்னுடைய கூட்டங்கள் எவ்வளவு மகத்தானதாய் இருந்தது என்பதைப் பற்றியோ, அல்லது தன்னைப் பற்றியுள்ள ஏதாவது எவ்வளவு மகத்தானதாயுள்ளது என்பதைப் பற்றியோ அவன் ஒருபோதும் பேசவில்லை.



அவன் தன்னைப் பற்றி புகழ்ந்து பேசும் ஒருவனாகவோ, அல்லது பெருமையுள்ள ஒருவனாகவோ இருக்கவில்லை. ஆனால் அவன் தன்னுடைய எஜமானைக் குறித்தும், தன்னுடைய எஜமானுடைய ஐசுவரியத்தைக் குறித்தும், தன்னுடைய எஜமானுக்கு சொந்த மான ஒவ்வொன்றிற்கும் சுதந்தரவாளியாகப் போகிற ஒரு குமாரன் தன்னுடைய எஜமா னுக்கு உண்டு என்பதைக் குறித்து மாத்திரம் பேசினான்.

தேவனுடைய உண்மையான ஊழியக் காரன் ஒருவனைக் குறித்த என்னவொரு அழகான காட்சி:



தன்னுடைய முழு கவனமும் எஜமானின் மேல் தான் இருக்கிறது, எஜமானைக் குறித்தும், குமாரனைக் குறித்துமே அல்லாமல் தன்னைப் பற்றியே ஜனங்களிடம் கூறிக் கொண்டிருக்க மாட்டான்.

அவர் எல்லாவற்றிற்கும் சுதந்தர வாளியாகப் போகிறார். அவன் தன்னைக் குறித்தோ அல்லது தன்னுடைய– – அல்லது தன்னுடைய மகத்தான (தன்னை அனுப்பின) அதிகார குழுவினரைக் குறித்தோ, அல்லது தன்னுடைய ஸ்தாபனத்தைக் குறித்தோ அல்லது அவன் கொண்டிருக்கும் ஏதோவொரு தலைமை அலுவலகத்தைக் (affiliation) குறித்தோ புகழ்ந்து பேசும்படி அவன் நேரத்தைக் கொண்டிருக்காமல், அந்த எஜமானைக் குறித்தும், அந்த குமாரனைக் குறித்தும் பேச அதிக நேரத்தை அவன் கொண்டிருக்கிறான்.

★★★★★